# 501 ஸ்பெஷல்

உங்கள் சலவைத் தொல்லைகளை ஒழிக்கும்

ஆடைகளை சுத்தமாக வெளுக்கவில்லையே என்றும், ஷர்ட்டுகளும், புடவைகளும் சலவை செய்யப்படும்போது கெட்டு விடுகிறதே என்றும் கவலைவேண்டாம். 501 ஸ்பெஷல் உபயோகித்து வாருங்கள்-உங்கள் தொல்லையெல்லாம் ஒழியும். 501 ஸ்பெஷல் சலவை செய்வதில் நிகரற்றசக்தியுடையது. மேலும், அது மிருதுத்தன்மையுள்ளது. அதன் திரண்ட நுரை உங்கள் மெல்லிய ஆடைகளைக் கெடுக்காமல் வெளுக்கச்செய்கிறது. 501 ஸ்பெஷல் உபயோகிக்கத் தொடங்குங்கள். இன்றே ஒரு பெட்டி வாங்குங்கள்.

501 ஸ்பெஷலைத் தவிர பிரசித்தி வாய்ந்த 501 வாஷிங் ஸோப்புமுள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. எல்லா வீட்டுக் காரியங்களுக்கும் தகுதியான ஸோப்பு. சதுரக் கட்டிகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும், சிவல்களாகவும் எல்லா பிரபலக் கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் ஸோப்பு வில்லைக் கட்டிகள் மூன்று விதமாக பெட்டிகளில் பாக்கு செயது விற்கப் படுகிறது. மிருகக் கொழுப்பற்றது.

டாம்கோ விற்பனை இலாகா :—
நெ. 1, வாரனரோட், பீமன்பேட் — மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

F S. 1946



# மதனமஞ்சரி

மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்
புரசவாக்கம் : எஸ். டி. பஸ்டாஞே.
ஊரிகம்: டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்

## குலதனம்

போலக் கேசதனமும், சில் குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக்கொண்டு அதை அடையுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்துவருவதால், இளநரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறுமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப்பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டே விருத்தி செய்யுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது. விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை.
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.



# ரூ. 500 இனும்!

## 'சித்'சக்தி கவ்சம்

இதன உபயோகத்தால் எவ்வளவு கடினசித்தமுள்ளவர்களும உங்களை உண்மையாக நேசிப்பா, வியாபாரததில லாபம. வியாஜ்ஜியத்தில் ஜெயம. ஆரோககியம. ஐச்வர்யம், காதல் விஷயங்களில் வெற்றி ஏறபட்டு, கிருஹதோஷங்களை நீக்கி, ராஜாங்கததில கௌரவம், கீர்த்தி. இஷ்டமபோல் விவாகம முதலிய ஏறபடும. புத்திர சந்தானம இல்லாதவர்கள் புருஷாள் ஒன்று. ஸ்திரீகள் ஒன்று ஆக இரண்டு கவசம தரிக்க வேண்டும. விலை செப்பு கேஸ் ரூ. 1-15-0 மூன்று ரூ 5. வெள்ளி கேஸ் ரூ 2-12-0 தங்க கேஸ் ரூ. 5-15-0 ஸ்பெஷல் நெ.5 ரூ. 6-12 0 தபால சார்ஜ் பிரத்யேகம.

உண்மை யில்லையென நிரூபித்தால ரூ. 500 வெகுமதி. பலனளிககாவிடில விலை வாபீஸ்

SHRI ANAND SWAMI
Post Box 61. (S. M) LAHORE
(E A B)



## வசீகரமான சருமத்தை ஏன் பெறலாகாது?

தினசரி இரவு தவறுமல் இரண்டு பைல்பீன்ஸ் உட்கொண்டுவந்தால், சுத்தமும், குற்றமுமற்ற சருமத்தைப் பெறலாம். இதுவே உள்ளூர ஆரோக்யத்தை வெளிப்படுத்தும் வெளிப்புற அழகு சாதனமாகும். பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து. சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தம் செய்து. தினசரி உணவு அசுத்தத்தை வெளிப்படுத்தும். இதனல் மேலான ஆரோக்யம், அழகிய சௌந்தர்யம் பெறலாம்.

எல்லாமருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1வீதம் விற்கின்றனர்

# BILE BEANS

பைல்பீன்ஸ் இருமடங்கு வசீகரமாகச் செய்யும். (15)



ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளையின்
நெக்டார்
சகல வயிற்று நோய்களையும் தீர்க்கும்
5 அவுன்ஸ் புட்டி மருந்துக்கு ரூ. 1—4—0.
பற்பொடி
பல் சுத்திக்கும், வியாதிகளுக்கும் சிறந்தது
20 பொட்டலங்கள் ரூ. 1—4—0
தபால் செலவு வேறு.
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயுபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.



## ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு.
விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணு 8.
மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

# வி.எச்.ஆர்

பெருங்காயம்


Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor. C. R. Srinivasan. B.A.

# சுதேசமித்திரன்

Vol. 13 No. 51	17-1-'43	வாரப்பதிப்பு	Price 2 Annas.

# சென்ற வார நிகழ்ச்சிகள்

## பிலிப்ஸ் பிரசன்னம்

ஜனாதிபதி ரூஸ்வெல்ட், இந்தியாவில் தமக்குப் பிரதிநிதியாக மிஸ்டர் வில்லியம் பிலிப்ஸ் என்பவரை நியமித்தார். அவர் இப்போது இந்தியா வந்துவிட்டார். அமெரிக்க சர்க்கார் இலாகாவில் இவர் 40 வருஷ காலம் தொடர்புகொண்டிருந்தார். இதன் காரணமாக இந்தியாவிடத்திலும், இந்தியர்கள் விஷயத்திலும் இவருக்குத்தீவிரமாகச் சிரத்தை ஏற்பட்டதாம். ஆனால் இந்தியாவுக்கு வருவது இதுதான் முதல்தடவை. "வாருங்கள், வாருங்கள்" என்று அமோகமாகத் அவரை வரவேற்பளிக்கக்கூடியவர்கள் இப்போது வெளியில் இல்லை. "இப்போது நீங்கள் வந்திருக்கும் சமயத்தில் உங்களை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டி, எங்கள் ஊர் இருக்கும் நிலைமையை நேரில் உங்களிடம் விவரமாக விளக்கம்செய்யக் கூடியவர்களில்லையே என்று வருத்தமாயிருக்கிறது" என்று இந்தியர்கள் சொல்லுவார்கள். அதில் ஆச்சர்யமில்லை. தகுந்த காரணங்களுண்டு. இருந்தபோதிலும் மிஸ்டர் பிலிப்ஸ் இந்தியாவின் இன்றைய நிலைமையைப் பற்றியும், எதிர் காலத்தில் உலக விவகாரங்களில் அதற்குள்ள முக்கியமான பங்கு குறித்தும் ஆராய்ந்து ஜனாதிபதிக்குத் தகவல் அனுப்பப் போகிறேனென்கிறார். 'ரொம்ப சரி. அப்படியே உள்ளது உள்ளதுபோலத் தெரிவியுங்கள்!

இந்தியாவில் நிலைமை எப்படியிருக்கிறது? என்ன பரிகாரம் உடனே தேவை? என்பது போன்ற விஷயங்களையெல்லாம் கிரிப்ஸ் வந்திருந்தபோது இங்கிருந்த கர்னல் லூயிஜான்ஸன் ஜனாதிபதிக்குச் சாங்கோ பாங்கமாகச் சொல்லியிருப்பார். லூயி பிஷர் வெகு விரிவாக எழுத்துப்பட விளக்கம் செய்திருக்கிறார். இப்போது மிஸ்டர் பிலிப்ஸும் வந்துவிட்டார். பிரதி நிதித்வமுள்ள இந்தியர்களைச் சந்திக்கப்போகிறேன் என்றார் பிலிப்ஸ். "அப்படியானால் சிறையிலுள்ள அரசியல் தலைவர்களையும் பார்ப்பீர்களோ?" என்றதற்கு "அப்புறம் சொல்கிறேனே!" என்று பதில் சொன்னார். இந்திய நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கும், பரிகாரம் தேடுவதற்கும் மிகவும் தெளிவான வழி இருக்கிறது. தலைவர்களைக் கண்டு பேசி சமரஸ ஏற்பாடுகளைச் செய்ய முற்படுவதே அவ்வழி. பிலிப்ஸ் என்ன செய்யப் போகிறார்? பொறுத்துப் பார்க்கலாம்.

* * *

## ஐக்ய மாகாணத்தில் குடி கேடு!

திருடன் திருடிக்கொண்டேதான் இருப்பான். குடியனும் அதே மாதிரி குடித்துக்கொண்டேதான் இருப்பான். ஆனால் திருடனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லையென்றோ அல்லது குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிக்கப் போதிய பணமில்லையென்றோ சொன்னால் அது சர்க்காருக்கு அழகானவாதமல்ல. குற்றங்களைத்தடுத்து குடிகளின் க்ஷேமத்தை நாடுவது சர்க்காரின் பிரதான கடமை. ஆனால் ஐக்கிய மாகாண சர்க்காரின் போக்கு அலாதியாயிருக்கிறது. செல்வ நிலையை உத்தேசித்தும் இது வரை மதுவிலக்கால் கிடைத்திருக்கும் பலன் சொற்பமென்பதை முன்னிட்டும் காங்கிரஸ் சர்க்கார் அங்கு ரார்ப்பணம் செய்து வைத்த மதுவிலக்கு திட்டத்தைக் கைவிட்டுவிடப் போகிறார்களாம்! அவர்கள் கூறும் மேற்படி இரு காரணங்களும் விசித்திரமானவை. ஒரே மூச்சில் மதுவிலக்கை ஆரம்பிப்பதால் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்த்து கொஞ்ச கொஞ்சமாகச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்பது காங்கிரஸ் சர்க்காரின் கருத்து. இந்த சீர்திருத்தம ஐக்கியமாகாணத்தில் 6 ஜில்லாக்களில் தான். அமுலில் அருந்தது சிறிய அளவில் பரீட்சார்த்தமாகக் கொண்டுவரப்பட்ட மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்துவதில் போதியபடி பயன் கிட்டவில்லையாயின் தவறு சர்க்காருடையதென்று தான் ஜனங்கள் சொல்வார்கள். ஜனங்களின் ஆதரவைப்பெற்ற சர்க்கார் செய்துவைத்த ஓர் திட்டத்தைச் சாக்குப் போக்குகள் சொல்லி தட்டிக்கழித்து கைவிட முற்படுவது ஜனநாயக முறைக்கு ஒத்ததாகாது.

* * * * *

## பன்ஸாலியின் உபவாச வெற்றி

ஆசிரியர் பன்ஸாலிக்கும் மத்திய மாகாண சர்க்காருக்கும் திருப்திகரமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதால், ஆசிரியர் பன்ஸாலி தாம் மேற்கொண்ட உண்ணு விரதத்தை நிறுத்திவிட இணங்கினர்.

சிம்மூர் சம்பவப் பிரச்னை சம்பந்தமாகவே ஆசிரியர் உபவாசம் இருந்து வந்தார். 11-ந்தேதி ராத்திரி முதல் அவர் ஜலம் அருந்துவதையும் நிறுத்திவிட்டார். கடைசியாக ஒரு சமரஸ ஏற்பாடு நடந்ததன் மேல் 63 நாளைக்குப் பிறகு ஆசிரியர் இன்று பிற்பகல் உண்ணு விரதத்தை நிறுத்தினர்.

ஆசிரியர் பன்ஸாலி சம்பந்தமான செய்திகளைப் பிரசுரிப்பது கூடாதென டிசம்பர் 12-ந்தேதி பிறப்பித்த தடை உத்தரவும் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டதாக மத்திய மாகாண ஸர்க்கார் தங்கள் முடிவை மற்ற மாகாண சர்க்கார்களுக்கும் அவர்கள் அறிவித்துவிட்டார்கள்.

## டாக்டர் ராய் தாக்குண்டார்

இம்மாத ஆரம்பத்தில் ஆருவது இந்தியப் புள்ளி விவர மகாநாட்டைத் திறந்து வைப்பதற்காக தர்பங்கா கட்டிட வாசலை அடைந்ததும் சுமார் 6 யுவர்கள் கல்கத்தா சர்வ கலாசாலை உப அத்யட்சகரான டாக்டர் பிதன் சந்திரராயைத் தாக்க முயன்றனர்.

டாக்டர் ராய் தமது மோட்டாரை விட்டு இறங்கியதும் யுவர்கள் அவர் முன்பாக ஒரு வெடியை வீசினர். உடனே அது வெடித்ததால் குழப்பம் ஏற்பட்டது. யுவர்கள் டாக்டர் ராயைத் தாக்கினர். டிரைவரின் உதவியைக் கொண்டு டாக்டர் ராய் மேற்படி யுவர்களுக்கு நல்ல அறை விட்டார். அந்த இடத்தில் ஜனத்திரள் கூடுவதைக் கண்டதும் யுவர்கள் இன்னொரு வெடியை வீசி விட்டு மறைந்தனர்.

டாக்டர் ராயின் டிரைவருக்குச் சொற்ப காயம்.

* * * *

## விரோதி ஏஜண்டுகள் புதிய அவ்சரச் சட்டம்

இம்மாதம் 9-ந் தேதியிட்டு இவ்வருஷத்திய முதல் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரோதி ஏஜண்டுகளையும் விரோதிக்கு உதவி செய்ய வேண்டுமென்ற உத்தேசத்துடன் சில குற்றங்களைச் செய்பவர்களையும் விசாரணை செய்து தண்டிக்க இச்சட்டம் அதிகாரமளிக்கிறது.

மேற்படி குற்றங்களைச் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கச் சட்டத்தில் வகை காணப்பட்டிருக்கிறது.

1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ந் தேதிக்குப் பிறகும் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கு முன்னதாகவோ அல்லது பிறகோ குற்றம் செய்பவர்களை ஒரு ஸ்பெஷல் ஜட்ஜ் விசாரணை செய்வார். சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை விதிக்க அவருக்கு அதிகாரமுண்டு, மரண தண்டனை விதிக்கப்படுவர் அல்லது ஆயுள் பரியந்தம் தண்டிக்கப்படுவர் விஷயத்தில் சிக்கலான பிரச்னைகள் எவையேனுமிருந்தால் ஸ்பெஷல் ஜட்ஜ் விசாரணை செய்த நடவடிக்கைகளை மத்திய சர்க்காரின் சார்பில் நியமிக்கப்படும் ஒருவர் பரிசீலனை செய்யலாம்.

* * * *

## விருந்தில் விரக்தி!

உணவுப் பிரச்னை தீரும்வரை சாப்பாடு, சிற்றுண்டி விருந்துகள் ஆகிய அழைப்புகளுக்கு ஸ்ரீ என். ஆர். ஸர்க்கார் சம்மதிக்க மாட்டார் என்று ஸ்ரீவால்சந்த் ஹிரா சந்துக்கும், ஸர் சிமான் லால் ஸெடல்வாடுக்கும் ஸ்ரீ ஸர்க்காரிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

## ராஜிநாமா செய்த காங்கிரஸ்காரர்கள்

சர்க்கார் கொள்கையை கண்டிக்கும் முறையில் ராஜஷாஹி முனிஸிபாலிடியிலிருந்து ராஜிநாமா செய்த ஏழு காங்கிரஸ் கவுன்ஸிலர்கள் இப்பால் நடந்த உப தேர்தல்களில் மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்களில் மூவருக்குப் போட்டியே ஏற்படவில்லை.

* * * *

## ரூ. 4 லக்ஷம் பெறுமான வெள்ளி போலீஸார் கைப்பற்றினர்

ஹர் இயக்கத்தின் தலைவரான பீர் பகாரோவின் சொத்தெனக் கூறப்படும் 4 லக்ஷம் ரூபாய் பெறுமான எண்பது கட்டி வெள்ளியைப் போலீஸார் சங்கார் என்ற இடத்துக்குச் சமீபத்திலிருந்து கைப்பற்றியிருக்கின்றனர்.

மேற்படி சொத்து பூமிக்கு அடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்தது.

* * * *

## இரண்டு ரூபாய் நோட்டுகள்

ஒரு ரூபாய் நோட்டுகளுக்குத் தேவை அளவுகடந்திருக்கும் நிலைமையை நிவர்த்திப்பதற்காக ரிசர்வ் பாங்கி சீக்கிரத்தில் இரண்டு ரூபாய் நோட்டுகளை வெளியிடுமென தெரிகிறது. 1942 ஆகஸ்ட்-செப்டம்பர் முதலே இந்த யோசனை இருந்து வந்தது. எதிர் பாராத சில காரணங்களை முன்னிட்டு யோசனையை நிறைவேற்ற முடியவில்லை. இந்நோட்டுகள் இம்மாதக் கடைசி முதல் செலாவணியிலிருக்குமெனத் தெரிகிறது.

* * * *

## துருக்கிப் பத்திரிகைக் கோஷ்டி

பிரபல துருக்கிப் பத்திரிகைக்காரர்களின் கோஷ்டி ஒன்று இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் சீக்கிரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இந்திய அரசியல் இலாகா அதிகாரியும், டெபுடி விளம்பர அதிகாரியும் அக்கோஷ்டியுடன் நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்வர். கோஷ்டியினர் டில்லி, லாகூர், பிஷாவர் அலிகார், லக்ஷ்மணபுரி காசி பம்பாய், கல்கத்தா சென்னை இவ்விடங்களுக்கும் இரண்டொரு சமஸ்தானங்களுக்கும் விஜயம் செய்யலாம்.

# போர் போகும் போக்கு

★

### தென்மேற்குப் பஸிபிக்

ஆஸ்திரேலியாவுக்கு வடகிழக்கேயுள்ள நியுபிரிட்டன் தீவில் முக்கிய துறைமுகம் ராபால். அங்கு ஜப்பானியர் கடற்படையைப் பெருவாரியாகத் திரட்டி வைத்திருக்கிறார்கள். யுத்தம் துவங்கியபின், இவ்வளவு ஏராளமான எதிரியுத்தக் கப்பல்கள் ஓரிடத்தில் திரண்டது அபூர்வம். இவ்வளவு பெரிய படை குடால்கனுரைத் தாக்கவா, அல்லது நியுகினி-டிமார்பகுதியில் ஏற்கனவே உள்ள எதிரிப் படையை வலுப்படுத்தவா என்று திட்டமாகத் தெரியவில்லை.




இப்போதே நியுகினியில் லே முதலிய ஸ்தலங்களில் துருப்புகளை இறக்க எதிரிகள் தீவிர முயற்சி செய்து வருகிறார்கள். இம்முயற்சியில் இதுவரை சில எதிரிக் கப்பல்கள் சேதமுற்றன. ஏராளமான ஜப்பானிய விமானங்கள் அழிந்தன. குடால்கனுரிலுள்ள தங்கள் தரைப்படையை வலுப்படுத்துவதிலும் அவர்கள் சிரத்தை செலுத்தி வருகிறார்கள். அப்பகுதியில் விரைவில் ஒரு பெரிய கடற்போர் நடக்குமெனத் திண்ணமாக எதிர்பார்க்கலாம். ஆஸ்திரேலியா மீது இப்போது படையெடுக்கும் எண்ணம் ஜப்பானியருக்குண்டா என்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து அதற்கு சப்ளை போய்ச் சேராமல் தடுப்பதில் ஜப்பானியருக்கு சிரத்தை இருப்பது நிச்சயம். இதற்கு ஆஸ்திரேலியாவுக்கு வடக்கேயும், கிழக்கேயும் ஒரு வளையம் போலுள்ள டிமார், நியூகினி, ஸாலமன் தீவுகள், ஸான்டா க்ரூஸ், நியு ஹெப்ரிடிஸ், நியுகலிடோனியா ஆகிய தீவுகள் ஜப்பானின் வசம் இருந்தாகவேண்டும்.

"யுத்தத்தின் முதல் வருஷத்தில் நமக்குப்பல வெற்றிகள் கிடைத்திருக்கின்றனவாயினும், நாம் ஆக்ரமித்துக்கொண்டிருப்பதெல்லாம் யுத்தம் நடத்துவதற்கு நமக்கு அவசியமாக வேண்டிய கேந்திர ஸ்தானங்கள்தான் இப்போது நாம் போர் புரியத் தயாராயிருக்கிறோம்" என்று ஜப்பானியப் பிரதம மந்திரி பேசினார். இதன் பொருளைப்பற்றிச் சந்தேகம் கொள்ள இடமில்லை நேசக் கட்சியினர் எத்தகைய நெருக்கடிக்கும் தயார் செய்து கொள்ள வேண்டும்.

### ரஷ்யப் போர் முனை

ரஷ்யப் போர் முனையில் மத்திய அரங்கம், தென் அரங்கம் இரண்டிலும் ஜெர்மனியர் சோவியத் முன்னேற்றத்தைத் தேக்கக்கூடவில்லை. முக்கியமாக டான் நதியின் தென் பகுதியிலும், காகஸஸிலும் ரஷ்யர் அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். ராஸ்டாவுக்குப் பல திக்குகளிலிருந்து ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆறு பெரிய ரஷ்யப் படைகள் அந்த ஜெர்மன் தளத்தை நோக்கி முன்னேறுகின்றன. அதற்கு வடக்கிலும், கிழக்கிலும் வந்துகொண்டிருக்கும் ரஷ்யரைத் தேக்க ஜெர்மனியர் தங்கள் ரிசர்வ் படைகளையெல்லாம் உபயோகித்து வருகிறார்கள். இப்போதே ரஷ்யச் சேனைகள் ஏராளமான ஜெர்மன் துருப்புகளைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. ராஸ்டாவ் சோவியத் வசமாகிவிட்டால் இன்னும் பெருவாரியான எதிரி படைகள் ரஷ்ய வளையத்துக்குள் சிக்கிவிடும். அத்துடன் காகஸஸ் பகுதியிலுள்ள ஜெர்மனியரும் தாங்கள் மூலதனங்களினின்றும் துண்டிக்கப்பட்டு விடுவார்கள். மாஸ்டக்-ராஸ்டாவ் ரயில் பாதையிலுள்ள ஜார்ஜிஸ்க் என்ற முக்கியமான ஜங்ஷனை ரஷ்யர் கைப்பற்றிவிட்டனர். ஸால்ஸ்க் என்ற பிரபல ரயில் நிலையத்துக்கும் ரஷ்யப்படைக்கும் இடையே உள்ள தூரம் 30 மைலுக்கும் குறைவு. காகஸஸிலுள்ள ஜெர்மனியர் ரஷ்யரால் வளைத்துக் கொள்ளபடுவதினின்றும் தப்புவதாயின், அவர்கள் டிகோரட்ஸ்க் ஸ்டேஷன் வழியாகவே ராஸ்டாவுக்குச் சென்றாக வேண்டும். இப்போது அந்த ஸ்டேஷனிலிருந்து 120 மைலில் ஒரு பெரிய ரஷ்யப் படை இருந்து வருகிறது.

மத்திய அரங்கத்தில் ரஷ்யர் வெலிகிலுகியைக் கைப்பற்றியதன் பேரில், லட்விய எல்லையை நோக்கி முன்னேறலாயினர். அங்கு ஜெர்மன் எதிர்தாக்குதலின் வேகம் மிகக் கடுமை. அத்தாக்குகலைக் குலைத்ததன் பேரில ரஷ்யர் மீண்டும் முன்னேறிக்கொண்டிருப்பதாகரஷ்ய அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

* * * *

### வட ஆப்பிரிக்க யுத்தம்

எகிப்திலிருந்து பின் வாங்கிய ரோமலின் படை டிரிபோலிடானுவில் ஸெம்ஸெம் என்ற பகுதியில் பிரிட்டிஷ் துருப்புகளை எதிர்த்து நிற்கலாமென்று சொல்லப்படுகிறது. டியுனிஸியாவில் குறிப்பிடத்தக்க போராட்டம் எதுவும் நிகழவில்லை. அயர்வுக்கான காரணங்களின் பருவநிலைக் கோளாறும் ஒன்று. பிப்ரவரிமாதம் முழுதும் இக்கோளாறு நீடிக்குமெனச் சொல்லப்படுகிறது. எப்படியும் இப்போதைக்கு பெருவாரியான தாக்குதல் துவங்குவதற்கில்லை. துவங்குவதற்கு முன், ஜெர்மனியர் தங்கள்படைகளையும், அரண்களையும் வெகுதூரம் வலுப்படுத்திக்கொண்டு விடக்கூடுமென்பதை நேச அதிகாரிகள் உணராமலில்லை

* * * *

### நாங்கிங் சர்க்கார் யுத்தப் பிரகடனம்

டோக்கியோ ரேடியோ அறிவிப்பதாவது:—ஜப்பானின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டதான நான்கிங் கவர்ன்மெண்டு யுனைடெட் ஸ்டேட்ஸ் மீதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீதும் யுத்தம் தொடுத்திருக்கிறது. இது அறிவிக்கப்பட்டவுடன் சீன-ஜப்பானிய உடன்பாடு ஒன்று வெளியிடப்பட்டது. இதன் மூலம் சீனக் கவர்ன்மெண்டும் (நான்கிங்) ஜப்பானும் முற்றிலும் ஒத்துழைப்பதென்றும், ஜப்பான் தனது விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுப்பதென்றும், அது வைத்திருந்த இடங்களைத் திரும்பச் சீனுவிடம் ஒப்புவித்து விடுவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

சீனுவிலுள்ள தங்கள் விசேஷ உரிமைகளை விட்டுக்கொடுக்கும் முறையில், அமெரிக்க, பிரிட்டிஷ் சர்க்கார் சங்கிங் சர்க்காருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர்.

* * * *

### துருக்கி-பல்கேரிய எல்லையில் ஜெர்மன் அரண்

ஸோபியாவிலிருந்து அங்கராவிற்கு வரும் பிரயாணிகள், ஜெர்மன் போக்குவரத்து, பயனீர் படைகள் ஏராளமாகப் பல்கேரியாவிலிருப்பதாகக் கூறுகின்றனர். நாஸிகள் துருக்கி-பல்கேரிய எல்லைப்புறத்தை ஒட்டி வைவ் போல் பல்கேரியாவுக்குள்ளே 20 மைல் தூரத்தில் அரண் வரிசைகளை கட்டி வருகின்றனர்.

* * *

### ரூஸ்வெல்ட் செய்தி

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அமெரிக்க காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியில, நேச தேசங்கள் ஜப்பானுக்குப் போய் போர்புரியும் என்று அந்நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்தார். "பஸிபிக்கில் ஜப்பானியரை சண்டைக்கிழுப்பதே நமது நோக்கம். இந்த வருஷம் நாம் முன்னேறித்தாக்கத் தீர்மானித்திருக்கிறோம்." என்றார் அவர்.

வட ஆப்பிரிக்காவில் யுத்தம் மிகக் கடுமையாக இருக்குமாயினும், மத்திய தரைக்கடலின் தென்புறத்திலிருந்து அச்சுநாட்டினரின் ஆதிக்கம் நிச்சயமாக அகற்றப்படும்" என்று அவர் கூறினார்.

ஐரோப்பாவிலும் நேசதேசங்கள் தீவிரமாக யுத்தம் நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும், ரஷ்யரும் தங்களது விமான பலத்தைக் கொண்டு எதிரிகளை மிகவும் உக்கிரமாகத் தாக்கப்போவதாகவும் அவர் வெளியிட்டார். அச்சுநாடுகளுக்கிருந்த விமானபலம் போய்விட்டது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சென்ற மாதம் அமெரிக்காவில் 550 விமானங்கள் செய்யப்பட்டதாகவும், இந்தத் தொகை விரைவில் விருத்தியடைந்துவருவதாகவும், 1942-ல் அமெரிக்காவில் 48000 யுத்த விமானங்கள் கட்டப்பட்டதாகவும் இதே மாதிரி இதர யுத்த சாதனங்களும் அதிகம் தயாரிக்கப்பட்டதாகவும், ராணுவத்தின் எண்ணிக்கை 20 லக்ஷத்திலிருந்து 70 லக்ஷத்திற்கு உயர்ந்திருப்பதாகவும், ஜனாதிபதி எடுத்துச்சொன்னார்.

"யுத்தம் முடிந்ததும் இத்தாலியும் ஜப்பானும் ஜெர்மனியும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு அந்த நிலைமை என்றும் நீடித்திருக்கவேண்டும். 1943-ல் பெர்லின், ரோம், டோக்கியோ ஆகிய நகரங்களை நோக்கி நாம் முன்னேறித் தாக்கும் நிலைமை ஏற்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன்" என்று ஜனாதிபதி கூறி முடித்தார்.

அமெரிக்கச் சர்க்கார் யுத்தச் செலவுக்காக 10,000 கோடி டாலர் ஒதுக்கி வைக்கும் முறையில் ஒரு திட்டம் தயாரித்து அதை காங்கிரஸ் முன் சமர்ப்பித்திருக்கின்றனர்.

* * * *

### ஹலிபாக்ஸ் குமாரர் கால்கள் வெட்டப்பட்டன

இந்தியாவில் முன் ராஜப்பிரதிநிதியாக இருந்தவரும், தற்சமயம் யுனைடெட் ஸ்டேட்ஸில் பிரிட்டிஷ் தூதராக இருப்பவருமான லார்டு ஹலிபாக்ஸின் கடைசிக் குமாரரான லெப்டினெண்ட் ரிச்சர்டு பிரடரிக்வுட் லிபியா தளமொன்றை எதிரி விமானங்கள் தாக்கியபோது காயப்பட்டதாகவும் அவரது 2 கால்களும் வெட்டப்பட வேண்டி வந்ததாகவும் 'டெயிலி மெயில்' பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் தெரிவித்தார். சென்ற அக்டோபர் மாதம் எகிப்தில் நடந்த போரில் லார்டு ஹலிபாக்ஸின் 2-வது குமாரரான மிஸ்டர் பீட்டர் உட் கொலையுண்டார்.

## திட்டமான வாழ்க்கை

★

**வ. ரா. வின் கட்டுரைகள்**

★

சமூகப் பொருளாதார சேவாத் துறைகளில் சீரிய வாழ்க்கை உண்டுபண்ணுவதற்கான கருத்துக்களடங்கிய இக் கட்டுரைகள் அடுத்த வார முதல் 'மித்திரன்' வாரப்பதிப்பில் வெளிவரும்.

**அட்டைப் படம்**

'ஆங் மிச்சோலி' படத்தில் நளினி ஜேயவந்த்



## சீவக சிந்தாமணி.-30

# பெரிய யாத்திரை

★

**வ. வேணுகோபாலன் எழுதியது**

சீவகன், தன்னுடைய துறவை யாவருக்கும் வெளிப்படக் கூறினன். பின்னர் தன் மனைவியர் எண்மருக்கும் இறுதியாகச் சில தரும வார்த்தைகளைச் சொல்லலானன்: "நங்கையரே, தவத்தையும், பூமியையும் ஒன்றுக நிறுத்தினல் பூமி, தவத்திற்குச் சிறு கடுகளவும் சமமாக நிற்காது. அதனை அறிந்து நாம் தவம் செய்தால் திருமகள் நம்மை விட்டு நீங்காள்:' ஆசையுடன் நின்ருல் திருமகள் நம்மைப் பொருந்தாள். ஆதலால் ஆசையை அகற்றித் தவம் செய்யுங்கள். பயனில்லாத பொருளை விரும்பாதீர்கள். யான் சொல்லும் பயனுடைய பொருளைக் கேளுங்கள். யாளி, யானையையே உணவாகப் பார்க்கும். எலியைப் பார்க்காது. அதுபோல அறிவுடையோர் பேரின்பமாகிய மோட்சத்தையே விரும்புவர், சிற்றின்பமாகிய செல்வத்தை விரும்பார். அத்தன்மை நீங்களும் அறிந்து துறவைக் கைக்கொள்ளுங்கள். சுவர்க்கத்துக்கு மேலான மோட்சத்தை விரும்பினல் என்னுடன் துறவு கொள்ள வருவீராக" என்றான்.

### தேவிமார் துறவு

மனைவியர் எண்மரும் அவன் அறவுரையால் அறிவு பெற்றனர். சீவகன் பாதத்தை முடி தோய வணங்கினர்; 'ஞான தேவ! நீர் செல்லும் மோட்ச உலகிற்கும் நாங்கள் உடன் வருவோம். அங்கு வந்து இன்று போலவே உங்களை வழிபட்டு மகிழ்ந்திருப்போம்" என்று கூறிச் சீவகனுடன் துறவு கொள்ளப் புறப்பட்டனர்.

சீவகன், தன், மனைவியர் எண்மரையும் அழைத்துச் சென்று விசயை தவம் செய்யும் தவப் பள்ளியை அடைந்தான். தாபத மகளிர் நிறைந்த அத் தவப் பள்ளியில் விசயையிடம், மனைவியர் எண்மரையும் துறவுக்கு அபயமாக வைத்தான். விசயை மகிழ்ந்து அவர்கள் துறத்தற்கு ஆவனவற்றைச் செய்வித்தாள். தேவியர் எண்மரும் தம் மீது எஞ்சியிருந்த ஆபரணங்களையும் தாமாகவே கழற்றி எறிந்தனர். தாபதமகளிர், வெண்மையான ஆடையை அவர்களுக்கு அளித்து உடுக்கச் செய்தனர். மனம், வாக்குக் காயங்களால் அடங்கியிருந்து, கூந்தலைப் பறித்து எறிந்து பொறுமையுடன் தவத்தை மேற்கொண்டனர். செம்பொற் கொடிகள் எட்டைப் போல் தேவியர் எண்மரும் தவம் புரிந்திருந்தனர்.

சீவகன் பெரிய தானத்தைச் செய்ய எண்ணி, இரவலர் யாவருக்கும் இரு கைகளாலும் அள்ளிப் பொன்னைச் சொரிந்தான். அவன் இரு கைகளும் சங்கநிதி இரண்டைப் போல் விளங்கின. "இரப்பவர்க்கு ஈயாத உலோபிகளே பெற்றுக்கொள்க" என்று கூறிப் பதும நிதி போன்ற கைகளால் யாவருக்கும் பொன்னை அளித்தான். ஆடை முதலியவற்றை அளித்துக் கற்பகம் போன்று விளங்கினன். பின்னர், தவக்கொடியாய் விளங்கிய விசயையை வணங்கிச் சிவிகையில் ஏறினன். அப்போது தேவர் தோன்றி சிவிகையைத் தாங்கிச் சென்றனர். வீணையொலியும் வேய்ங்குழல் ஓசையும் கேட்டன. சங்கமும் முரசமும் சப்தித்தன. சீவகன் சிவிகையில் மகிழ்வுடன் சென்றான். இவ்வாறு சிறிது சென்றதும் சேய்மையில் தேவர்களால் நிருமிக்கப்பெற்ற சமவசரணம் என்னும் சினலயம் தோன்றியது. அதை விரைவில் அடைந்தனர். சிவிகை தாங்கிய தேவர்கள். சீவகன் சிவிகையை விட்டு இறங்கிக் கோயிலைத் தொழுதான்.

### சீவகன் துறவு

சமவசரணத்தைத் தொழுத பின் சீவகன் கோயிலுக்குள் சென்றான். சினலயத்தில் நடுவில் அசோகமரத்தின் நிழலில் விளங்கி தீர்த்தங்கரராகிய சீவர்த்தமாதமான சுவாமிகளை முடிதோய வணங்கித் துதித்தான். சீவகனுக்கு சீவர்த்தமான சுவாமிகள் மீது தோன்றிய அன்பாலும், அவரது அருளாலும் இருவினைப்பயன் கெட்டன. பக்திமிகுதியால் கண்ணீர் ததும்ப நின்றான். மெய்ம்மயிர் சிலிர்த்தன. உடனே வாமனை வலம் வந்து வணங்கினன். முத்துமாலை, பவளமாலை, மலர் மாலை, பொன்மாலை முதலியன எங்கும் விளங்கின. அருக தேவன் அசோகின் நிழலில் அமர்ந்திருந்தான். தேவர்கள் இருபுறமும் சாமரை வீசிநின்றனர். அசோகமரத்தின் கிளைகளில் மாலைகள் தொங்கின. தளிர்கள் எங்கும் தளிர்த்திருந்தன. இவ்விடத்தே தருமமாகிய அமுதமுள்ளது. யாவரும் அருந்துங்கள் "என்று தேவர் ஆரவாரித்தனர். பூமழையும பொன் மழையும் சொரிந்தனர். சீவகன் அருகனுடைய பாதத்தைப் புகழ்வதற்கு அருகில் சென்றான். அப்போது அருகிலிருந்த தேவர், சீவர்த்தமானரை நோக்கி, "அடிகளே இவன்குலம் குருகுலம், இவன் பெயர் சீவகன். இவன் கோத்திரம் காசிப கோத்திரம்" என்று கூறினர். சீவகன் மகிழ்ச்சியுடன் அருகில் சென்று வணங்கி, "அடிகள் இனி யான் துறப்பேன்: அருள் புரிக" என்று வேண்டினன். உடனே சீவர்த்தமானர் சீவகனை அருள் பொழியப் பார்த்து, "குமர உன் மனம் தெளிவு பெற்றுத் துறவில் வீழ்ந்தது. ஆதலால் அது சிறப்புடையதே" என்று அருளினர். அது கேட்ட சீவகன் உள்ளம் குளிர்ந்தான். மீண்டும் அவரை வணங்கி தருமமூர்த்தி! யான் பிறவியை அஞ்சினேன். உன் குணத்தை நாள் தோறும் பாடாதவரைக் கடவுள் என்று உலகம் கூருது. உன் பாத மலர்களைத் தம் தலையில் சூடாதவரது பாதங்களைத் தேவரும் தம் தலையில் சூடார். ஆதலால், உன்னை நான் பாடுகிறேன். உன் அடிமலரை என் தலைமீது சூடிக்கொள்கிறேன்;" என்று கூறினன். மூன்றுமுறை வலம் வந்தான். வாய் திறந்து பலவாறு துதித்தான். அவரது அடிகளில் தன் முடியைச் சூட்டினன். பின்னர் கணதரர் பதினொருவரில் ஒருவராகிய சுதன்மர் என்பவரது கோயிலுக்குச் சென்று அவரை வணங்கி வலம் வந்தான். அக்கோயிலுக்கு அருகிலுள்ள சித்திரச் சோலையை அடைந்து ஆடைகளையும் ஆபரணங்களையும் சுழற்றி எறிந்தான். இந்திர நீலத்தைப்போல் இருண்டு விளங்கிய தலை மயிரைப் பறித்தான்.

அப்போது சுதஞ்சணன் அங்கு வந்து அம்மயிரை வாங்கிச் சென்றான். பாற்கடலில், "நமோ" என்று கூறிப் போட்டுச் சீவகனிடம் மீண்டும் வந்தான். துறவு பூண்ட மகிழ்ச்சியால் அருகனைத் துதித்துக் கொண்டிருந்த சீவகனை வணங்கி வாழ்த்தினன். 'உயிரோடிருப்பவர்கள், சீவகன் கூறும் தரும வார்த்தைகளைக்கேட்டுத்தெளிக, தேவராவீர்கள்" என்று கூறினன். பின்னர் சீவகனிடம் விடைபெற்றுத் தன் நகரம் சேர்ந்தான்.

சீவகன், சமவசரணத்தில் தருமத்தை நிலைநிறுத்தி அருகன் அருள் பெற்றுத் துறந்தமையால், சுருத ஞானங்கள் அவனுக்கு விரைவில் அடைந்தன. நந்தட்டனும் தோழர்களும் துறந்து சீவகனிடம் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கும் சுருத ஞானம் நிறைந்தது.

நீண்ட நாட்கள் அருகன் கூறிய ஆகமத்தின் வழியே சீவகன் தவம் செய்தான். அருகனை நோக்கித்தவம் செய்யும் முனிவர் குழாத்தில் தானும் ஒருவனானன்,

* * * *

மகத நாட்டின் தலைநகர் இராசமாகிருகம் என்பது. அதற்கு அரசன். சேணிகன் என்பவன். அருகதேவனிடத்து அளவற்ற அன்புடையவன் அவன். ஒரு நாள் சினலயம் சென்று அருகனை அருச்சித்து வரப்புறப்பட்டான். பரிவாரங்களுடனும், பூ, தீபம், தூபம் முதலியவற்றுடனும் சினலயம் சென்றான். அருகனை வணங்கி அருச்சித்தான். பின்னர் கோயிலை வலம் வந்தான். அருகில் விளங்கிய சுதன்மர் கோயிலுக்கும் சென்று வணங்கி, சித்திரச்சோலையையும் வலம் வந்தான். அப்போது முனிவர் குழாத்தில் வீற்றிருக்கும சீவகனைக்கண்டு வியப்புற்றான். "அருகன் அருளிய ஆகம வழி தவறியதோ, அன்றி இவன் தான் தேவனே" என்று ஐயுற்றான். உடனே அருகில் இருந்த சுதன்மரை நோக்கி, "அடிகள். தேவன் இங்கு வந்து துறவு பூண்டுள்ளானே; அருகன் அருளிய ஆகமும் தவறியதே" என்றான். சுதன்மர் புன்முறுவலுடன், "மன்னவ, தேவரும், போக பூமியிலுள்ள வரும் சிறிதும் துறவார். அருகன் அருளிய ஆகமவழியிலன்றி வேறு வழியில் எப்பொருளும் தோன்ரு" என்று கூறினர். "அடிகளே,